Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-5**

Name : சுனில்
Father / Husband name : சுதாகர்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.03.2025

**Accused 1 to 3 Present.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது பாஞ்சாலம் கிராத்தில் வசிக்கிறேன். நான் அட்டை கம்பெனியில் வேலை செய்கிறேன். சாட்சி நந்தினி, பாக்கியலட்சுமி ஆகியோர் எனது சித்தி ஆவார்கள். சாட்சி மேகலா எனது அத்தை. சாட்சி செல்வகுமார் எனது சித்தப்பா. 31.12.2023 ம் தேதி இரவு 9 மணியளவில் புத்தாண்டை முன்னிட்டு எனது சித்தப்பா செல்வகுமார் பசங்களுடன் சேர்ந்து ரேடியோபோட்டுவிட்டு டேன்ஸ் ஆடுகொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் ஜனா, விநாயகம், விக்கி ஆகிய மூன்றுபேரும் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். உடனே எனது சித்தப்பா ரேடியோவை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றார். அதற்கு எதிரிகள் ஏன்டா பொட்ட மாதிரி போற என்று கேட்டார்கள். ஆஜா் எதிரிகள் மூன்று பேரும் என்னை அடித்தார்கள். சித்தப்பா அஜித்குமார் ஏன் எனது அண்ணன் மகனை அடிக்கீறிர்கள் என்று கேட்டதற்கு கீழே இருந்த கல்லை எடுத்து சித்தப்பாவின் இடது கண்ணில் அடித்துவிட்டார்கள். அவரை விடவே கூடாது என்று எட்டி எட்டி உதைத்தார்கள். அதன்பின்னர் எனது சித்தி நந்தினி எனது சித்தப்பா செல்வகுமாரை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். எனது சித்தப்பாவிற்கு கண் பார்வை தெரியாது என்று சொன்னதால் 1 1/2 வருடமாக சிகிச்சைக்காக

எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தார். நந்தினி சித்தி இது சம்மந்தமாக கேஸ் கொடுத்தார்கள்.

போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-6**

Name : சத்தியா
Father / Husband name : சுதாகர்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.03.2025

**Accused 1 to 3 Present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாஞ்சாலம் கிராத்தில் வசிக்கிறேன். நான் தாம்பரத்தில் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். சாட்சிகள் நந்தினி, செல்வக்குமார், சுனில், மேகலா ஆகியோர்கள் எனது உறவினர்கள். 31.12.2023 ம் தேதி இரவு 9 மணியளவில் எனது மைத்துனர் அஜித்குமார் சின்ன பசங்கள் டான்ஸ் ஆடவேண்டும் என்று கேட்டதால் ஸ்பீக்கர் பாக்ஸ் விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச்சென்றார். அப்போது எதிரிகள் ஜனா, விக்கி, விநாயகம் ஆகிய மூவரும் குடித்துவிட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் அங்கிருந்ததால் எனது மைத்துனர் வீட்டிற்கு வந்துவிட்டார். எனது மைத்துனர் வீட்டிற்கு வந்ததால் எதிரிகளை அவரை அசிங்கமாக திட்டினார்கள். அதற்கு சுனில் என்பவர் ஏன் எனது சித்தப்பாவை அசிங்கமாக திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் சுனிலை அடித்தார்கள். அப்போது எனது மைத்துனர் ஏன் சின்ன பையனை அடிக்கீறிர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் சேர்ந்து மைத்துனர் அஜித்குமாரை கல்லால் கண்ணில் குத்திவிட்டார்கள். சுனிலையும் அடித்துவிட்டார்கள். இரத்தம் வந்த பிறகும் விடாமல் அஜித்குமாரை விநாயகம் எட்டி எட்டி உதைத்தார். பின்னர் நானும் நந்தினியும் மருத்துவமனைக்கு அஜித்குமாரை அழைத்து சென்றோம். திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்து முண்டியம்பாக்கம் அழைத்து சென்றோம். அங்கு எனது மைத்துனருக்கு நரம்பு கட்டாகிவிட்டது என்று சொன்னதால் அரவிந்தா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் சென்னைக்கு சென்று பார்த்தோம். அங்கு மாதம் மாதம் சிகிச்சை எடுத்துவந்துள்ளார். நாங்கள் காவல் நிலையத்தில் ரிப்போர்ட் கொடுத்தோம். எங்களை

அழைத்து எதுவுவே விசாரிக்கவில்லை. ஆறு மாதத்திற்கு பிறகு கேஸ் எடுத்தார்கள். அதன்பிறகு போலிசார் வீட்டிற்கு வந்து மேப்போட்டு சென்றார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-7**

Name : சுதாகர்
Father / Husband name : சுப்ரமணியன்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.03.2025

**Accused 1 to 3 present.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பாஞ்சாலம் கிராத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். சாட்சி பச்சையப்பன் எனது சித்தப்பா, அவர் போன வருடம் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களான பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களிலுள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது தான். அந்த கையொப்பங்களை 05.01.2024 அன்று காலை 9 மணியளவில் ரோசனை காவல் நிலைய போலிசார் பாஞ்சாலம் வந்து சண்டை போட்ட இடம் எது என்று கேட்டு அந்தயிடத்தை ஸ்கெட் போட்டார்கள். அதற்கு சாட்சியாக இருக்க சொல்லி கையொப்பம் கேட்டார்கள், நான் இரண்டு கையொப்பங்கள் போட்டோன். சார் ஒருவர் வாங்கியதால் எத்தனை கையொப்பங்கள் போட்டேன் என்று ஞாபகமில்லை. வேறு எதுவும் இல்லை. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களிலுள்ள சாட்சியின் இரண்டாவது கையொப்பங்கள் மட்டும் அ.சா.ஆ. 2 மற்றும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 31.12.2023 ம் தேதி நடந்த சண்டை சம்மந்தமாக ரோசனை காவல் நிலைய உதவி

ஆய்வாளர் 05.01.2024 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சம்பவத்தில் பயன்படுத்தியதாக கூறும் கருங்கல் ஒன்றை உங்கள் இருவரின் முன்னிலையில் காலை 9 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து உங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நீங்கள் இருவரும் கையொப்பம் செய்துள்ளீர் என்றும் போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.